## நேஷன்ஸ் மெக்ஸ் போனஸ் சேவிங்ஸ் - நியதிகளும் நிபந்தனைகளும்

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ – PQ 118 (‘வங்கி’) இல் ஆரம்பித்து பேணப்படுகின்ற நேஷன்ஸ் மெக்ஸ் போனஸ் சேமிப்புக் கணக்குகளை பின்வரும் நியதிகளும் நிபந்தனைகளும் ஆளும்.

1. கணக்குகள், வங்கியினால் ஏற்றுக்கொள்ளத்தக்க அடையாளத்தை உறுதிப்படுத்துகின்ற ஆவணங்களுக்கும் (உதாரணம்: தேசிய அடையாள அடடை, செல்லுபடியான கடவுச்சீட்டு, சாரதி அனுமதிப்பத்திரம்) அத்துடன் தொடர்பு முகவரியினைச் சரிபார்ப்பதற்கான ஆவணமொன்றுடனும் (உதாரணம்: அண்மைய உபயோகப் பட்டியல், வங்கிக்கூற்று) தொடர்புபடுத்துவதன் மூலம் சாதகமான அடையாளப்படுத்தலின் மீது வங்கியினால் அனுமதிக்கப்பட்ட ஆளொருவரினால்/ஆட்களினால் திறக்கப்படலாம்.

2. கணக்குகள்,

   அ. தனிப்பட்ட ஒருவரினால் அவரது பெயரில் திறக்கப்படலாம்
   ஆ. பொறுப்பாணைப் படிவத்தில் தரப்படுகின்ற மீளெடுப்பு அதிகாரத்தின் மீதான தெளிவான அறிவுறுத்தல்களுக்கு உட்பட்டு அவர்களது உரிய பெயர்களில் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்டோர் இணைந்து திறக்கலாம், அல்லது
   இ. வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனியொன்றின், அமைப்பொன்றின், கழகமொன்றின் அல்லது வங்கியினால் ஏற்றுக்கொள்ளத்தக்க அதனையொத்த நிறுவனமொன்றின் பெயரில் திறக்கப்படலாம்.

3. ஒவ்வொரு கணக்கிற்கும் ஒரு இலக்கம் வழங்கப்படும். அது வங்கியுடனான அனைத்து தொடர்புகளிலும் அத்துடன் அனைத்து வைப்புச் சீட்டுக்கள் மற்றும் மீளெடுப்புப் படிவங்கள் மீதும் குறிப்பிடப்படப் வேண்டும். அத்தகைய இலக்கத்தினை கணக்கு வைத்திருப்பவருக்கான அறிவித்தலுடன் மாற்றுவதற்கு வங்கி உரிமையினைக் கொண்டிருக்கும்.

4. கணக்கானது கூற்று அடிப்படையிலமைந்த சேமிப்புக் கணக்கொன்றாகவிருக்கும். வங்கியின் ஏக தற்றுணிபில், விதிவிலக்கான சூழ்நிலைகள் தவிர சேமிப்பு புத்தகங்கள் கணக்குகளுக்கு வழங்கப்படமாட்டாது.

5. சேமிப்புக் கணக்குகளின் நோக்கத்திற்காக வங்கி நம்பிக்கைப் பொறுப்புகளை அங்கீகரிப்பதில்லை.

## விதிவிலக்காக வழங்கப்படும் வங்கிப் புத்தகங்களுக்கு ஏற்புடைய நிபந்தனைகள்

6. சேமிப்பு புத்தகத்தின் மீது கணக்குவைத்திருப்பவரினால் பதிவுகள் எதுவும் மேற்கொள்ளப்படலாகாது என்பதுடன் கோரப்படுகின்ற போது கணக்கு வைத்திருப்பவர் சேமிப்பு புத்தகத்தை வங்கிக்கு சமர்ப்பிக்க வேண்டும். சேமிப்பு புத்தகமானது கைமாற்றத்தகாதது அல்லது குறித்தொதுக்கப்படத்தகாதது என்பதுடன் பிணையாக வாக்குறுதியளிக்கப்பட முடியாததாகும்.

7. கணக்கு வைத்திருப்பவர், பதிவின் சரியான தன்மையினை உறுதி செய்வதற்கு ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலின் பின்னரும் சேமிப்பு புத்தகத்தை பரீட்சித்தல் வேண்டும் என்பதுடன் எவையேனும் பிழைகள் வங்கிக்கு உடனடியாக அறிவிக்கப்படல் வேண்டும்.

8. சேமிப்பு புத்தகம் தொலைகின்ற, திருடப்படுகின்ற அல்லது அழிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் கணக்கு வைத்திருப்பவர் உடனடியாக வங்கிக்கு அறிவிக்க வேண்டும்.

9. பிந்திய பதிவுகளை இற்றைப்படுத்துவதற்காக வங்கிப் புத்தகம் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் வைப்புகள் செய்யப்பட்டிருக்கலாம் அல்லது விடயங்கள் அறவிடப்பட்டு/பற்று

வைக்கப்பட்டிருக்கலாம் என்பதனால் வங்கிப் புத்தகம் கணக்கின் சரியான மீதியினை குறித்துக்காட்ட வேண்டும் என்ற அவசியமில்லை.

10. வங்கியானது கணக்கிற்கென காலாந்தர மீதிக் கூற்றுகளை வழங்காது. அத்தகைய கூற்றுகளை வாடிக்கையாளர் கோருகின்ற பட்சத்தில், வங்கியின் வெளியிடப்பட்ட கட்டணங்களுக்கு அமைவாக அத்தகைய கூற்றுகளை வழங்குவதற்கு கட்டணமொன்றினை அறவிடுவதற்கு வங்கி உரிமையினைக் கொண்டிருக்கும்.

11. சேமிப்பு புத்தகம் கிரமமாக இற்றைப்படுத்தப்படல் வேண்டும். சேமிப்பு புத்தகம் மீது இறுதியாக பதிவுசெய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் பின்னர் மூன்று மாதங்களுக்குள் சேமிப்பு புத்தகம் இற்றைப்படுத்தப்படாவிடின், கொடுக்கல்வாங்கல் விவரங்களுக்கான பிரதிகள் அல்லது அறிவுறுத்தல்கள் வங்கியிடமிருந்து அதன் பின்னதாக கோரப்படாவிடின் அவ்வாறானவற்றை வழங்குவதற்காக கட்டணம் ஒன்றினை அறவிடுவதற்கு வங்கி உரிமையினைக் கொண்டிருக்கும்.

**<u>கூற்று சேமிப்புக் கணக்கிற்கு மாத்திரம் ஏற்புடைய நிபந்தனைகள்</u>**

12. வேறு வகையில் இணங்கப்பட்டாலன்றி வங்கியானது தொழிற்படுகின்ற நிலையிலுள்ள கணக்குகளுக்காக வங்கியினால் தீர்மானிக்கப்படும் அத்தகைய கால இடைவெளிகளில் காலாந்தர மீதிக் கூற்றுகளை வழங்கும். மீதிக் கூற்றுகளை வழங்குவதற்காக அதன் வெளியிடப்பட்ட கட்டணங்களுக்கு அமைவாக கட்டணம் ஒன்றினை அறவிடுவதற்கு வங்கி உரிமையினைக் கொண்டிருக்கும்.

13. கணக்கு வைத்திருப்பவர் அவரது மீதிக் கூற்றுகளின் பிரதிகளை பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு பொறுப்புடையவராவார். மீதிக் கூற்றுகளின் மேலதிகப் பிரதிகள் வங்கியிடமிருந்து கோரப்படுமாயின், அதன் வெளியிடப்பட்ட கட்டணங்களுக்கு அமைவாக கட்டணம் ஒன்றினை அறவிடுவதற்கு வங்கி உரிமையினைக் கொண்டிருக்கும்.

**வைப்புகள்**

14. நேஷன்ஸ் மெகா சேவர் கணக்குடன் ஆரம்பிக்கப்படக் கூடிய குறைந்தபட்ச ஆரம்ப வைப்புத் தொகை ரூபா 10,000/- ஆக அல்லது காலத்திற்குக் காலம் வங்கியினால் நிர்ணயிக்கப்படக் கூடிய அத்தகைய வேறு தொகையாக இருக்கும்.

15. வைப்புக்கள் விரும்பியவாறு அடிக்கடி மேற்கொள்ளப்படலாம். அனைத்து வைப்புகளும், பண வைப்பு இயந்திரத்தில் வைப்பு மேற்கொள்ளப்படுமாயின் இலத்திரனியல் பற்றுச்சீட்டொன்றினை உருவாக்குவதன் மூலம் அல்லது கீழ் கருமபீடத்திலாயின் வைப்புச்சீட்டின் மீது வங்கியின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரின் கையொப்பத்தின் மூலம் காசாளர் முனையத்தில் வைப்புச்சீட்டினை இலத்திரனியல் மூலமாக செல்லுபடியாக்குதல் அத்துடன் /அல்லது வைப்புப் புத்தகத்தில் பதிவொன்றின் (ஏற்புடையதாயின்) மூலம் ஏற்றுக் கொள்ளப்படும்.

16. கிளை முகாமையாளரின் அனுமதிக்குட்பட்டு, வங்கியில் பேணப்படுகின்ற கணக்கொன்றின் மீது தொடர்ந்து பயன்பெறுபவரின் பெயர் மற்றும் கணக்கிலக்கத்திற்கு வரையப்படும் காசோலை வைப்புகள் ஏற்றுக் கொள்ளப்படலாம் என்பதைத் தவிர, கணக்கிற்கு காசு வைப்புகள் மாத்திரம் அனுமதிக்கப்படும். அவ்வாறு வைப்பிலிடப்பட்ட காசோலைகளின் பெறுகைகள் (ஏதேனுமிருப்பின்) கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டாலன்றி வங்கியின் கிளைகளில் அமைந்துள்ள காசோலை வைப்புப் பெட்டிகளில் வைப்பிலிடப்பட்டதாக கூறப்படுகின்ற ஏதேனும் காசோலைகளுக்கு (தற்காலிக அறிவுறுத்தலினை சமர்ப்பித்தல் எவ்வாறிருப்பினும்) வங்கி பொறுப்புடையதாகாது அல்லது கணக்குவைத்திருப்பவரிடமிருந்தான ஏதேனும் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளாது.

17. வங்கியானது அதன் ஏக தற்றுணிபில், வேறு வங்கிகள் மீது வரையப்பட்ட வரைவுகள் (“வேறு வங்கி வரைவுகள்”) அத்துடன் வேறு வங்கிகளில் பேணப்படுகின்ற கணக்கொன்றின் மீது வரையப்பட்ட காசோலைகள் (வேறு வங்கி காசோலைகள்”) கொள்வனவுசெய்யப்பட வேண்டுமா அல்லது சேகரிப்புக்காக அனுப்பப்பட வேண்டுமா என்பதை தீர்மானிக்கும். கொள்வனவுசெய்யப்பட்ட அனைத்து விடயங்கள் தொடர்பிலும் கொடுப்பனவு செய்கின்ற வங்கியினால் கொடுப்பனவு நிறைவேற்றப்படாத நிகழ்வுக்கு பின்னரும் அனைத்து கொள்வனவுசெய்யப்பட்ட அனைத்து விடயங்கள் தொடர்பிலும் கணக்கு வைத்திருப்பவருக்கெதிராக அறவிடுவதற்கான (கட்டணங்கள் உள்ளடங்கலாக) முழு உரிமையினையும் வங்கி கொண்டிருக்கும். கொடுப்பனவு நிறைவேற்றப்படாமை அறிவித்தல் கிடைப்பனவின் மீது கணக்கு பற்றுவைக்கப்படும். கணக்கிற்கு வரவுவைக்கப்படும் காசோலைகள், சேகரிப்புக்காக மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் வரையும் வங்கியினால் தீர்ப்பனவு செய்யப்படும் வரை பெறுகைகள் மீளெடுப்புக்காக கிடைக்கப்பெறமாட்டாது. நிதியங்கள் கிடைக்கப்பெறுகின்ற திகதியானது குறித்துக்காட்டும் நோக்கத்திற்காக மாத்திரம் காண்பிக்கப்படுகின்றது.
18. வங்கி மீது வரையப்பட்ட வரைவுகள்/காசோலைகள் கணக்கொன்றின் வரவுக்காக கொடுப்பனவு செய்யப்படுகின்ற போது, வங்கியானது அதன் வெளியிடப்பட்ட கட்டணங்களுக்கமைவாக கையாளுகின்ற கட்டணங்களை கழிக்கும். அத்தகைய வைப்புகளின் பெறுமதித் திகதியானது வங்கியில் நடைமுறையிலுள்ள கொள்கையினைச் சார்ந்து வங்கியினால் தீர்மானிக்கப்படும். கணக்கின் வரவுக்காக வேறு வங்கி காசோலைகள் மற்றும் வேறு வங்கி வரைவுகள் கொள்வனவு செய்யப்படுகின்ற போது, கணக்கிற்கு வரவுவைக்கும் போது சாதனத்தின் முகப்பெறுமதியிலிருந்து கையாளுகைக் கட்டணங்களுக்கு மேலதிகமாக வங்கியின் வெளியிடப்பட்ட கட்டணங்களுக்கு அமைவாக கழிவுக் கட்டணங்களையும் வங்கி கழிக்கும்.

19. மேலே ஏற்பாடுசெய்யப்பட்டவை தவிர, கணக்குகள், காசோலைகளைச் சேகரித்தல் மற்றும் தீர்ப்பனவுகள் செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டவையல்ல என்பதுடன், கொண்டுவருபவருக்கு, கணக்கு வைத்திருப்பவருக்கு அல்லது மூன்றாம் தரப்பினர்களுக்கு செலுத்தப்படக்கூடியதாக வரையப்பட்ட காசோலைகள் மற்றும் பங்கிலாப ஆணைச்சீட்டுக்கள் மற்றும் ஏதேனும் வேறு சாதனங்களை வைப்பிலிடுவதற்கு ஏற்றுக்கொள்வதை நிராகரிப்பதற்கு வங்கி உரிமையினை கொண்டிருக்கும்.

## <u>மீளெடுப்புகள்</u>

20. கணக்கிலிருந்து மாதமொன்றுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மீளெடுப்புகளை கணக்கு வைத்திருப்பவர் மேற்கொள்ளுமிடத்து கீழே 23 ஆம் பிரிவிற்கு அமைவாக போனஸ் வட்டிக்கு கணக்கு வைத்திருப்பவர் உரித்துடையவராகமாட்டார். என்பதுடன், இவ் வரையறை வங்கியின் ஏக தற்றுணிபில் காலத்திற்கு காலம் மாற்றப்படலாம்.

21. ஏனைய வங்கிகளின் பண மீளெடுப்பு இயந்திரங்களில் இருந்தானவை உள்ளடங்கலாக மீளெடுப்புகளுடன் தொடர்புடைய அனைத்து கட்டணங்களும், வங்கியின் வெளியிடப்பட்ட கட்டணங்களுக்கு அமைவாக செலுத்தப்படக் கூடியதாகவிருக்கும்.

22. இதில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளுக்குட்பட்டு, நியாயமான காலத்தினுள், அஞ்சல் மூலம் கிடைக்கப்பெற்ற அல்லது வங்கியின் கிளைகளுக்கு ஒப்படைக்கப்பட்ட மீளெடுப்புகளுக்கான (நிலையியல் உள்ளடங்கலாக) கணக்கு வைத்திருப்பவரின் எழுத்து மூல அறிவித்தல் விடயத்தில் மாத்திரம் வங்கி செயற்படும். வங்கிக்கும் கணக்கு வைத்திருப்பவருக்கும் இடையிலான குறிப்பான உடன்படிக்கையின்றி தொலைநகல், மின்னஞ்சல் அல்லது ஏதேனும் வேறு இலத்திரனியல் ஊடகம் வாயிலாக கிடைக்கப்பெறுகின்ற ஏதேனும் அறிவுறுத்தல்களை வங்கி ஏற்றுக்கொள்ளாது. முன்னுறுகின்ற பிரிவுகளில் பயன்படுத்தப்பட்டவாறு “மீளெடுத்தல்” என்ற

சொற்பதம் அத்தகைய கணக்கு பற்று வைக்கப்படுகின்றது என்பதை தோற்றுவிக்கின்ற கணக்கு மீதான ஏதேனும் கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்குகின்றது.

**வட்டி**

23. நாளாந்தம் கிடைக்கப் பெறுகின்ற மீதியின் மீது நடப்பு வீதத்தில் கணிக்கப்படுகின்ற வட்டி, மாதாந்தம் அத்தகைய கணக்கிற்கு வரவுவைக்கப்படும் (வழமையாக மாதத்தின் கடைசி நாளன்று).

24. 23ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட வட்டிக்கு மேலதிகமாக, காலத்திற்கு காலம் வங்கியினால் விதித்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச மாதாந்த மீதியினை கணக்கு வைத்திருப்பவர் பேணுவாராயின் காலத்திற்கு காலம் வங்கியினால் விதித்துரைக்கப்பட்டவாறு **"போனஸ் வட்டி"** ஒன்றுக்கு கணக்கு வைத்திருப்பவர் உரித்துப் பெறுவார். அத்தகைய போனஸ் வட்டியானது கணக்கிற்கு மாதாந்தம் (வழமையாக மாதத்தின் இறுதிநாளன்று) வரவு வைக்கப்படும்.

25. வட்டிக் கொடுப்பனவுகள் மீது கொடுப்பனவு செய்யத்தக்க பிடித்து வைத்தல் வரி அல்லது ஏதேனும் வேறு வரி **(வரிகள்)** உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் அல்லது சட்டத்தினால் பதவிகுறிக்கப்பட்ட அத்தகைய அதிகாரியினால் விதித்துரைக்கப்பட்டவாறு காலப்பகுதிக்காக (அத்தகைய வீதத்தில் அல்லது வீதங்களில்) கொடுப்பனவு செய்யப்படத்தக்க வட்டியிலிருந்து வங்கியினால் கழிக்கப்படும். தொடர்புடைய அதிகாரியினால் வங்கியிடமிருந்து பின்னதாக கோரப்படுமிடத்து, கணக்கு வைத்திருப்பவரிடமிருந்து ஏதேனும் நேரத்தில் ஏதேனும் அறிவித்தலின்றி செலுத்தப்படாத வரிகளை அறவிடுவதற்கு வங்கி உரிமையினைக் கொண்டுள்ளது.

**<u>பொதுவானவை</u>**

26. வங்கியானது அதன் தற்றுணிபில் கணக்கில் உள்ள மீதி ரூ, 1000 விட அல்லது காலத்திற்கு காலம் வங்கியினால் குறித்துரைக்கப்பட்டவாறு அத்தகைய வேறு தொகையினை விட குறைகின்ற போதெல்லாம் அதன் வெளியிடப்பட்ட கட்டணத்திற்கமைவாக சேவைக் கட்டணமொன்றினை ('குறைந்தபட்ச மீதிக் கட்டணம்') அறவிடலாம் அத்துடன்/அல்லது போனஸ் வட்டி உள்ளடங்கலாக வட்டியினை பிடித்துவைக்கலாம் அல்லது குறைக்கலாம்.

27. குறைந்தபட்ச மீதிக் கட்டணத்தை அறவிடுவதற்கு போதிய நிதியங்கள் கிடைக்கப்படாத பட்சத்தில், வங்கியானது கணக்கில் போதிய நிதியங்கள் கிடைக்கப்பெறுகின்றதன் மீது அத்தகைய ஒன்றுசேர்ந்த கட்டணங்களை உடனடியாக அறவிடுவதற்கு உரிமையினைக் கொண்டிருக்கும்.

28. ஏதேனும் நேரத்தில் கணக்கு நிலுவை பூச்சியமாக அல்லது குறைந்தபட்ச மீதிக் கட்டணத்தை விட குறைவாக இருக்குமெனில், கணக்கினை முடக்குவதற்கான உரிமையினை வங்கி கொண்டுள்ளது.

29. வங்கியின் சாதாரண தொழில் நடவடிக்கையில் அறிவித்தலினை வழங்குவதன் மூலம் எந்நேரத்திலும் கணக்கினை மூடுவதற்கான உரிமையினைக் கொண்டிருக்கும்.

30. ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்களைக் கொண்ட காலப் பகுதியினுள் கணக்கு வைத்திருப்பவர்களினால் கணக்கு மூடப்படுமாயின் வங்கி, அதன் வெளியிடப்பட்ட கட்டணங்களுக்கு அமைவாக கிடைக்கப்பெறுகின்ற மீதியிலிருந்து கையாளுகை கட்டணமொன்றினைக் குறைப்பதற்கு அல்லது/அத்துடன் போனஸ் வட்டி உள்ளடங்கலாக வட்டியினைக் குறைப்பதற்கு உரிமையினைக் கொண்டிருக்கும்.

31. இந் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைவாக நடப்பு மாதத்தினுள் அல்லது தொடர்ந்து வருகின்ற மாதத்தின் அல்லது கணக்கை மூடுவதற்கு முன்னர் கணக்கிலிருந்து ஏதேனும்

கட்டணங்களை அத்துடன்/அல்லது கணக்கு வைத்திருப்பவரினால் செலுத்தப்படக் கூடிய வரிகளை அறவிடுவதற்கு வங்கி உரிமையினைக் கொண்டிருக்கும்.

32. வங்கியானது அதன் ஏக அத்துடன் முழுமையான தற்றுனிபில் எந்நேரத்திலும் இந் நியதிகளையும் நிபந்தனைகளையும் திருத்துவதற்கு உரிமையினைக் கொண்டிருக்கும் என்பதுடன் அத்தகைய திருத்தம் கணக்கு வைத்திருப்பவரை பிணைப்பதாகவிருக்கும். அத்தகைய திருத்தங்கள் பற்றிய அறிவித்தல் (ஏதேனுமிருப்பின்) வங்கியினால் அதன் சாதாரண தொழில் நடவடிக்கையில் வழங்கப்படும்.

33. வங்கியின் சாதாரண தொழில் நடவடிக்கையில் கணக்கு வைத்திருப்பவருக்கு அறிவித்தலை வழங்குவதன் மூலம் ஏதேனும் நேரத்தில் நேஷன்ஸ் மெக்ஸ் போனஸ் சேவிங்ஸ் உற்பத்தியினை மீளப்பெறுவதற்கான உரிமையினை வங்கி கொண்டிருக்கும். அதன் பின்னர் கணக்கானது வங்கியினால் குறித்துரைக்கப்படும் கணக்கு வகையொன்றுக்கு மாற்றம்செய்யப்படும் என்பதுடன், அத்தனைய கணக்கினை ஆளுகின்ற நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்படுத்தப்படும்.

34. சட்டத்தினால், அரசாங்க ஒழுங்குவிதிகளால் அல்லது இலங்கை மத்திய வங்கியின் அறிவுறுத்தல்களால் அத்தகைய திருத்தங்கள் அவசியப்படுத்தப்பட்டிருப்பின் இந்நியதிகளும் நிபந்தனைகளும், தன்னிச்சையாக திருத்தப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

35. வங்கியானது கணக்கு வைத்திருப்பவருக்கான அறிவித்தலின்றி, கணக்கினை வங்கிக்கான கணக்கு வைத்திருப்பவரின் ஏதேனும் பொறுப்புகளுடன் ஒருங்கிணைக்கலாம் அல்லது ஒன்றுசேர்க்கலாம் என்பதுடன் அத்தகைய பொறுப்புகள், உண்மையாக அல்லது எதிர்பாராதவையாக, முதன்மையானவையாக அல்லது பிணையஉறுதியாக அத்துடன் பலதாக அல்லது இணைந்ததாக எதுவாகவிருப்பினும்சரி, ஏதேனும் அத்தகைய கணக்கின்/கணக்குகளின் அல்லது ஏதேனும் வேறு தொடர்பில் வங்கிக்கு கணக்கு வைத்திருப்பரிடமிருந்து கிடைக்கவேண்டிய ஏதேனும் தொகைக்கு/தொகைகளுக்கு எதிராக கணக்கின் வரவில் இருக்கின்ற ஏதேனும் தொகையினை/தொகைகளை எதிரீடு செய்யலாம் அல்லது மாற்றல்செய்யலாம்.

36. வாடிக்கையாளருடன் தொடர்புடைய கணக்குத் தகவல்கள் உள்ளடங்கலாக அனைத்துத் தரவுகளும், ஊடுகடத்தப்படலாம் அத்துடன்/அல்லது ஏதேனும் அமைவிடத்தில் சேமிக்கப்படலாம் அல்லது வைத்திருக்கப்படலாம் அத்துடன் அத்தகைய ஊடுகடத்தல், சேமித்தல் அத்துடன்/அல்லது அணுகுதல் அவசியமானது என வங்கி அபிப்பிராயப்படுகின்றவிடத்து, கணக்கு பற்றிய வங்கிக் கூற்றுகளை அச்சிட்டு அஞ்சல் செய்வதற்காக அல்லது ஏதேனும் அதனையொத்த சேவைகளை வழங்குவதற்காக வங்கியின் அதிகாரமளிக்கப்பட்ட ஆளணியினால் வங்கியினால் ஈடுபடுத்தப்படுகின்ற எவரேனும் தரவு செயன்முறைப்படுத்தல் சேவை வழங்குநரினால் அல்லது மூன்றாம் தரப்பினரால் அணுகப்படலாம் என கணக்கு வைத்திருப்பவர் இணங்கி ஏற்றுக்கொள்கின்றார்

37. ஏதேனும் கணக்கிற்கு மேற்கொள்ளப்படுகின்ற பிழையான பதிவுகள், அடுத்துவருகின்ற காலமுறையான நிலுவைக் கூற்றினை வழங்குவதற்கு அல்லது சேமிப்பு புத்தகத்தை இற்றைப்படுத்துவதற்கு (ஏற்புடையவிடத்து) முன்னரோ அல்லது வழங்குவதற்குப் பின்னரோ பற்றுவைத்தல் பதிவின் ஊடாக (மீளத்திரும்பல் பதிவு) மீளத்திருப்பப்படலாம், சரிசெய்யப்படலாம் அல்லது இரத்துச்செய்யப்படலாம்.

38. இதில் உள்ளடக்கப்பட்டுள்ள நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் மேலதிகமாக, கணக்கு வைத்திருப்பவர், வங்கியின் பொதுவான தொழில் நிபந்தனைகளில் கூட்டிணைக்கப்பட்ட நியதிகளுக்கு நிபந்தனைகளுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். இந்நியதிகள் மற்றும் நிபந்தனைகளில் குறிப்பாக உள்ளடக்கப்படாத ஏதேனும் விடயத்திற்காக கணக்கு வைத்திருப்பவர் பொதுவான தொழில் நிபந்தனைகளை பார்க்க வேண்டும்.

39. வங்கியானது அதன் தற்றுணிபில் கணக்கு ஆரம்பித்ததன் பின்னர் கணக்கு வைத்திருப்பவருக்காக ஆயுட்காப்புறுதி காப்பீடொன்றினை அத்துடன்/அல்லது தீவிர நோய்க் காப்பீடொன்றினை ஏற்பாடு செய்யலாம். காப்புறுதி காப்பீட்டின் கீழ் உரிமைக் கோரிக்கையொன்றினை மேற்கொள்கின்ற நேரத்தில் தொடர்ச்சியாக மூன்று மாதங்களுக்கு அல்லது வங்கியினால் விதித்துரைக்கப்பட்டவாறு அத்தகைய வேறு காலப்பகுதிக்கு ரூபா 10,000/- விட குறையாத தொகையினைக் கொண்ட மீதியினை கணக்கு வைத்திருப்பவர் பேணியிருந்தால் மாத்திரம் காப்புறுதி காப்பீட்டின் கீழான நன்மைகளுக்கு உரித்துடையவராக இருப்பார்.

40. இதற்கானவற்றை அனுசரித்து வழங்கப்படும் காப்புறுதிக் காப்பீடுகள் காப்புறுதிக் கம்பனியின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாகவிருக்கும். காப்புறுதிக் காப்பீடொன்றினை வழங்குவதற்கு அல்லது கணக்கு வைத்திருப்பவருக்கு வழங்கப்படும் ஏதேனும் காப்புறுதிக் காப்பீட்டின் கீழ் காப்புறுதி செய்யப்பட்ட தொகையினை கொடுப்பனவு செய்வதற்கு காப்புறுதி கம்பனி மூலமான ஏதேனும் தவறுகைக்காக அல்லது நிராகரிப்புக்காக கணக்கு வைத்திருப்பவருக்காக வங்கி பொறுப்புடையதாக இராது அல்லது பொறுப்பேற்காது.“

41. காப்புறுதிக் கம்பனியினால் வாடிக்கையாளர் உட்படுவதற்கு வேண்டப்படுகின்ற ஏதேனும் மருத்துவ மதிப்பீட்டின்/பரிசோதனைகளின் செலவு வாடிக்கையாளரினால் ஏற்கப்பட வேண்டும்.

42. மேலே குறிப்பிட்ட ஆயுட்காப்புறுதி காப்பீட்டினை ஏற்பாடு செய்யும் நோக்கத்திற்காக கணக்கு வைத்திருப்பவருடன் தொடர்புடைய தகவல்களை காப்புறுதிக் கம்பனிக்கு வெளியிடுவதற்கு கணக்கு வைத்திருப்பவர் இத்தால் வங்கிக்கு அதிகாரமளிக்கின்றார் அத்துடன் சம்மதிக்கின்றார்.

43. காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழ் கணக்குவைத்திருப்பவருக்கு ஏதேனும் நலன் கொடுப்பனவு செய்யத்தக்கதாக வருமெனில், அதன் தற்றுணிபில் கணக்கு வைத்திருப்பவரின் சார்பில் வரையப்பட்ட வங்கி வரைவு ஒன்றினை வழங்குவதற்கு அல்லது கொடுப்பனவுத் தொகையின் பெறுகைகளைக் கணக்கிற்கு வைப்பிலிடுவதற்கு வங்கிக்கு அதிகாரமளிக்கின்றார்.

44. இந் நியதிகளும் நிபந்தனைகளும் இலங்கையின் சட்டங்களால் ஆளப்படும் என்பதுடன், கணக்கு வைத்திருப்பவர் இலங்கையின் நீதிமன்றத்தில் பிரத்தியேக நியாயதிக்கத்திற்கு சமர்ப்பிக்கின்றார்.

நேஷன்ஸ் மெக்ஸ் போனஸ் சேவிங்ஸ் கணக்கிற்கு உற்பத்தியுடன் தொடர்புடைய இந்நியதிகள் மற்றும் நிபந்தனைகள் அத்துடன் விபரங்கள், கையொப்பமிடுவதற்கு முன்னர் எனக்கு/எங்களுக்கு வழங்கப்பட்டு விளக்கப்பட்டுள்ளது என்றும் அத்தகைய விபரங்கள் மற்றும் இந நியதிகள் மற்றும் நிபந்தனைகளை நான்/நாங்கள் வாசித்துப் புரிந்துகொண்டோம் என்றும், இவற்றின் மூலம் பிணைக்கப்பட்டிருப்பதற்கு உடன்பட்டு சம்மதிக்கிரோம் என்றும் நான்/நாங்கள் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்/உறுதிப்படுத்துகின்றோம்.

வாடிக்கையாளரின் கையொப்பம் வாடிக்கையாளரின் கையொப்பம்

வாடிக்கையாளரின் கையொப்பம வாடிக்கையாளரின் கையொப்பம்